செ.வெ.எண்: 347/2016 நாள்: 10.06.2016

# பத்திரிக்கை செய்தி குறிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கீழ்க்கண்டவாறு 16 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | விடுதியின் விவரம் | மாணவர்களுக்கானது | மாணவியர்களுக்கானது |
|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 1.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, மார்த்தாண்டம்<br><br>2.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதி, பூட்டேற்றி | 1.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, குளச்சல்<br><br>2.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, இரணியல்<br><br>3.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, நாகர்கோவில்<br><br>4.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, அழகப்பபுரம்<br><br>5.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, தக்கலை<br><br>6.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, குழித்துறை<br><br>7.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, புதுக்கடை<br><br>8.அரசு பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதி, கருங்கல் |
| 2 | கல்லூரி/பாலிடெக்னிக்/ஐடிஐ விடுதிகள் | 1.அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, ஆரல்வாய்மொழி<br><br>2.அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, அகஸ்தீஸ்வரம் | 1.அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, சுங்கன்கடை<br><br>2.அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில் |

| | | | |
|---|---|---|---|
| | | | 3.அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீஸ்வரம்<br><br>4.அரசு சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில்(இ)கோவளம். |

2) பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/ மாணவியர்களும் கல்லூரி/பாலிடெக்னிக்/ஐடிஐ விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக்/ஐடிஐ படிப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். பிவ/மிபிவ/சீம விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ/மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**3) விடுதிகளில் பின்வரும் சலுகைகள எவ்வித செலவினமும் இல்லாமல் இலவசமாக வழங்கப்படுகின்றன.**

அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கு உணவும் தங்கும் வசதியும் அளிக்கப்படும்.

10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 2 செட் பாலியெஸ்டர் காட்டன் சீருடைகள் வழங்கப்படும்.

10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும்.

மலைப்பிரதேசங்களில் இயங்கும் விடுதிகளில் கம்பளி மேலாடைகள் வழங்கப்படும்.

## <u>4. விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்</u>

- பெற்றோர் /பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கீ.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

5) தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளிடமருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

6) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் **30.06.2016** க்குள்ளும், கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் **15–7–2016** க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத்தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

7) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத்தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மாணவ/மாணவியர் அரசின் இச்சலுகைகளை பெற்று, பயனடையுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

**திரு. சஜ்ஜன் சிங் ரா.சவான்**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
**கன்னியாகுமரி** மாவட்டம்.

**/உண்மைநகல்-உத்தரவுபடி/**

**மாவட்ட ஆட்சித்தலைவருக்காக**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.